செய்தி வெளியீடு எண்: 178 நாள்: 15.03.2013

<u>செய்தி வெளியீடு</u>

## தகுதி வாய்ந்த ஆதிதிராவிட இனத்தை சார்ந்த விண்ணப்பதாரர்களின் கனிவான கவனத்திற்கு.....

தாட்கோ மூலம் செயல்படுத்தப்படுத்தப்படும் கீழ்க்கண்ட பொருளாதார மேம்பாட்டு திட்டங்களுக்கு ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் 15.03.2013 முதல் 30.03.2013 வரை வரவேற்கப்படுகின்றன.

1. நிலம் வாங்குதல் (ம) மேம்படுத்துதல்
2. தொழில் முனைவோர் பொருளாதார மேம்பாட்டுத் திட்டம்
3. இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்பு திட்டம்
4. மருத்துவமனை அமைத்தல் (MBBS, BSMS, BDS, and BPT பட்டம் பெற்றவர்களுக்கு)
5. பெட்ரோல் / டீசல் / கேஸ் சில்லரை விற்பனை நிலையம்
6. மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கான சுழல்நிதி, மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கான பொருளாதார கடனுதவி
7. துரித மின் இணைப்பு திட்டம்
8. விருப்புரிமை நிதி திட்டம்
9. இந்திய குடிமைப் பணி முதன்மை தேர்வு எழுதுவோருக்கு நிதியுதவி

மானியத்துடன் கூடிய கடன் உதவி பெற விண்ணப்பிப்பவர்கள் இந்து ஆதிதிராவிடர்களாக இருக்க வேண்டும். கண்டிப்பாக 18 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும். குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.1 இலட்சம் ஆகும். சிறப்புத் திட்டமான பெட்ரோல்/டீசல் / கேஸ் சில்லரை விற்பனை நிலையம் அமைக்க குடும்ப ஆண்டு வருமானம் ரூ.3 இலட்சம் வரை இருக்கலாம்.

இத்திட்டத்தில் பயன்பெற விரும்புபவர்கள் http://application.tahdco.com என்ற இணையதள முகவரிக்கு சென்று விண்ணப்பத்தினை ஆன்லைனில் பதிவு செய்யவேண்டும். பதிவு செய்யும் போது குடும்ப அட்டை எண் அல்லது இருப்பிட சான்று, சாதிச் சான்று, வருமானச் சான்று ஆகியவற்றின் எண், வழங்கப்பட்ட தேதி ஆகியவற்றை அதற்கான இடத்தில் அவசியம் பதிவு செய்யவேண்டும். அதுபோல் திட்ட அறிக்கை பெறப்பட்ட தேதியையும் அதற்கான இடத்தில் குறிப்பிடவேண்டும். புகைப்படத்தை ஸ்கேன் செய்து பதிவேற்றம் செய்ய வேண்டும்.

மேலாண்மை இயக்குநர்
தாட்கோ

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**